# ADM COURT, SANKARANKOVIL

**தேதி** 06.03.2023

**அசல் வழக்கு எண்.39/2014**

**வா.சா.2 மீண்டும் ஆஜர் சத்தியபிரமாணத்தின் பேரில் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

1. எனக்கு சாட்சியம் அளிப்பதற்காக நீதிமன்றத்திலிருந்து சம்மன் எதுவும் வரவில்லை. 2ம் வாதி செல்வராஜ்தான் என்னை சாட்சியம் அளிப்பதற்காக அழைத்து வந்தார் என்றால் சரிதான். எதற்காக என்னை 2ம் வாதி அழைத்து வந்தார் என்றால் சந்து பிரச்சனை சம்மந்தமாக சாட்சியம் அளிப்பதற்காக என்னை அழைத்து வந்தார். என் வீட்டிற்கு மேல்புறம் நடைபாதை உள்ளது. எனக்கும் என்வீட்டிற்கும் பின்புறம் உள்ள வேறு நபருக்கும் இடையே நடைபாதை சம்மந்தமாக பிரச்சனை ஏற்பட்டது என்றால் சரியல்ல. அவ்வாறு பிரச்சனை ஏற்பட்டது என்றாலும் அப்போது பிரதிவாதி எனக்கு ஆதரவு செய்யாததால் எனக்கம் பிரதிவாதிக்கும் 10 வருடத்திற்கு மேலாக பேச்சுவார்த்தை இல்லை என்றாலும் சரியல்ல. பிரதிவாதியுடன் கடந்த 4,5 ஆண்டுகளாக எனக்கு பேச்சுவார்த்தை இல்லை. பிரதிவாதியின் வீட்டின் மாடி மழைநீர் தண்ணீர் விழுவது சம்மந்தமாக எனக்கும் பிரதிவாதிக்கும் பிரச்சனை ஏற்பட்டதால் எங்களுக்குள் பேச்சுவார்த்தை இல்லை. தண்ணீர் விழுவது சம்மந்தமாக ஏற்பட்ட பிரச்சனைக்காக நான் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேனா என்றால் இல்லை.

2. நானும், 2ம் வாதி மற்றும் பிரதிவாதியும் ஒரே சமூகத்தை சேர்ந்தவர்கள் என்றால் சரிதான். எங்களுக்குள் ஏற்பட்ட பிரச்சனை சம்மந்தமாக ஊர்

பெரியவர்களிடம் புகார் சொன்னேனா என்றால் இல்லை. பிரதிவாதியின் வீட்டின் மாடியில் இருந்து வரும் தண்ணீரால் வாதிகளுக்கும் எனக்கும் எந்த பாதிப்பும் இல்லை என்றால் சரியல்ல. தபசில் 2ம் அயிட்ட நடைபாதை வாதிகளுக்கு மட்டும் பாத்தியப்பட்டது என்பதற்கான ஆவணத்தை பார்த்தேனா என்றால் இல்லை. 8 வருடத்திற்கு முன்பு பிரதிவாதி வீடு கட்டினார். பிரதிவாதியின் வீடு ஆதியிலிருந்தே இருந்து வருகிறது என்றாலும் நான் வழக்கிற்காக 8 வருடத்திற்கு முன்பாக கட்டப்பட்டது என பொய் சொல்லுகிறேன் என்றாலும் சரியல்ல.

3. பிவாசாஆ.1 புகைப்படத்தில் பிரதிவாதியின் வீட்டையொட்டி தபசில் 2 அயிட்ட நடைபாதையில் புதிதாக சிமெண்டால் பூசப்பட்டுள்ளது என்றால் சரிதான். சிமெண்டால் பூசப்பட்டது 2ம் வாதி செல்வராஜ் பூசினார். சிமெண்டால் பூசப்பட்ட பகுதியில் ஏற்கனவே பிரதிவாதியால் பூமிக்கடியில் பைப்பு புதைக்கப்பட்டு தன்னுடைய வீட்டின் கழிவுநீரை எடுத்துச்சென்றார் என்றால் சரியல்ல. பிரதிவாதி பைப்பு மூலம் தண்ணீர் கொண்டு போனதை நான் வழக்கிற்காக கொண்டுபோகவில்லையென வாதிகளுக்கு ஆதரவாக பொய் சொல்லுகிறேன் என்றால் சரியல்ல. என் வீட்டிற்கும் பிரதிவாதியின் வீட்டிற்கும் முன்புறம் கீழ்மேலாக வாறுக்கால் செல்கிறது என்றால் சரிதான். அந்த வாறுக்காலின் அளவு 1 1/2 அடி அகலம் 2 அடி ஆழம் உள்ளது. பிரதிவாதியின் வீட்டின் பின்புறம் சமையலறை உள்ளது என்றால் சரிதான். பிரதிவாதியின் வீட்டின் மாடியில் கழிப்பறை இல்லை என்றால் அது கழிப்பறையாக அல்லது குளியறையாக என்று எனக்கு சரியாக தெரியாது. பிரதிவாதியின் வீட்டின் மாடியிலிருந்து விழும் தண்ணீரில் மலங்கல்

இல்லை என்றால் சரிதான். பிரதிவாதியின் வீட்டின் மாடியில் குளியறையும் கழிப்பறையும் இல்லை என்றாலும் மாடியை அவ்வபோது கழுவிவிடும் தண்ணீர் மட்டுமே பிரதிவாதியின் வீட்டிலிருந்து வெளியேறுகிறது என்றால் சரியல்ல.

4. பிரதிவாதியின் வீட்டின் மாடியிலிருந்து விழும் தண்ணீர் நேரடியாக வாறுக்காலுக்கு செல்கிறது என்றாலும் பிரதிவாதியின் வீட்டிலிருந்து விழும் தண்ணீரால் எனக்கும் வாதிகளுக்கும் எவ்வித பாதிப்பும் இல்லை என்றால் சரியல்ல. பிரதிவாதியின் வீட்டின் மாடியிலிருந்து விழும் தண்ணீர் 10 ஆண்டுகளாக விழுமா என்றால் இல்லை கடந்த 5 , 6 ஆண்டுகளாக தண்ணீர் விழுகிறது. பிரதிவாதியின் வீட்டின் மாடியிருந்து விழும் தண்ணீரால் எனக்கு எந்த பாதிப்பும் இல்லாததால்தான் நான் பிரதிவாதிக்கு எதிராக எந்தவித சட்டநடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் சரியல்ல. எனக்கும் பிரதிவாதிகளுக்கும் இடையே 10 ஆண்டுகளாக பேச்சுவார்த்தை இல்லாத காரணத்தினால் நான் பிரதிவாதிகளுக்கு எதிராக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. 2ம் வாதி என்னுடைய நெருங்கிய நண்பர் என்பதால் நான் அவருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறு விசாரணை இல்லை.**